
**டிசம்பர் – 29**

# TNPSC துளிகள்

❖ புகழ்பெற்ற மணல் கலைஞர் சுதர்சன் பட்நாயக், ஒடிசாவின் பூரியில் உள்ள நிலாத்ரி கடற்கரையில் 1.5 டன் ஆப்பிள்கள் மற்றும் மணலைப் பயன்படுத்தி "சாண்டா கிளாஸின் உலகின் மிகப்பெரிய ஆப்பிள் மற்றும் மணல் உருவம்" ஒன்றை உருவாக்கினார்.
   - இந்தச் சிற்பம் இந்திய உலகச் சாதனைப் புத்தகத்தினால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப் பட்டது.

# தேசியச் செய்திகள்

## PMGSY திட்டத்தின் 25 ஆம் ஆண்டு நிறைவு




❖ பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா (PMGSY) திட்டமானது 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 25 ஆம் ஆண்டினை நிறைவு செய்தது.

❖ இது முன்னர் போக்குவரத்து சேவை இணைப்பு இல்லாத கிராமப்புறக் குடியிருப்புகளுக்கு அனைத்து வானிலையிலும் செயல்படும் வகையிலான சாலை இணைப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு மத்திய நிதியுதவி திட்டம் ஆகும்.

❖ PMGSY திட்டமானது, முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் பிறந்த நாளான 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.

❖ இந்தத் திட்டம் இந்திய அரசின் கிராமப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தால் (MoRD) செயல்படுத்தப்படுகிறது.

❖ PMGSY நான்கு கட்டங்களைக் கொண்டுள்ளது:
   - PMGSY-I: போக்குவரத்து சேவை இணைப்பு இல்லாத குடியிருப்புப் பகுதிகளுக்கான பொது இணைப்பு.
   - PMGSY-II: தற்போதுள்ள கிராமப்புறச் சாலைகளை மேம்படுத்துதல்.
   - PMGSY-III: சந்தைகள், பள்ளிகள் மற்றும் சுகாதார வசதிகளை இணைத்தல்.

   - PMGSY-IV (2024–29): 62,500 கி.மீ சாலைகள் வழியாக 25,000 குடியிருப்புப் பகுதிகளை இணைப்பதை இலக்காகக் கொண்டது.

- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் கிட்டத்தட்ட 95% நிறைவு செய்யப்பட்டதுடன், 8.25 லட்சம் கி.மீ.க்கும் அதிகமான சாலைகள் இதில் அனுமதிக்கப்பட்டன.
- OMMAS, e-MARG, GPS கண்காணிப்பு மற்றும் புவியிடத் தகவல் கொண்ட ஆய்வுகள் ஆகியவை உட்பட தொழில்நுட்பம் சார்ந்த கண்காணிப்புகள் இதில் பயன்படுத்தப் படுகின்றன.
- மூன்று அடுக்கு தரக் கண்காணிப்பு அமைப்பு இச்சாலையின் நீடிப்புக் காலம் மற்றும் தரநிலைகளை உறுதி செய்கிறது.
- நிலையான கட்டுமானத்தில் நெகிழிக் கழிவு, எரி சாம்பல் மற்றும் உயிரி நிலக்கீல் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள் அடங்கும்.
- PMGSY ஆனது கிராமப்புறங்களில் சந்தை அணுகல், வேளாண்-சந்தை இணைப்புகள், கல்வி, சுகாதாரம் மற்றும் நலன்புரி சேவைகளை மேம்படுத்துகிறது.

## ஆரவல்லி மலைத்தொடரில் சுரங்கத் தடை மண்டலங்கள்





- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் ஆனது முழு ஆரவல்லி மலைத்தொடரிலும் புதிதாக எந்தவிதமான சுரங்க குத்தகைகளையும் மேற்கொள்ள முழுமையான தடை விதித்துள்ளது.
- இந்தத் தடையானது, சட்டவிரோதமான மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத சுரங்க நடைமுறைகளைத் தடுப்பதற்கு குஜராத் முதல் தேசியத் தலைநகர் பகுதி (NCR) வரை ஒரே மாதிரியாகப் பொருந்தும்.
- கூடுதல் சுரங்கத் தடை மற்றும் பாதுகாக்கப்பட்ட மண்டலங்களை அடையாளம் காணும் பணியை இந்திய வனவியல் ஆராய்ச்சி மற்றும் கல்வி சபை (ICFRE) கொண்டு உள்ளது.
- சுற்றுச்சூழல் சார்ந்த தாக்கம், உயிரினங்களுக்கு சுற்றுச்சூழலால் வழங்கப்படும் ஆதரவு மற்றும் புத்துயிர்ப்பு நடவடிக்கைகளை உள்ளடக்கிய அறிவியல் அடிப்படையிலான மேலாண்மைத் திட்டத்தையும் ICFRE தயாரிக்கும்.
- தற்போதுள்ள சுரங்க நடவடிக்கைகள் கடுமையான சுற்றுச்சூழல் கண்காணிப்பு

மற்றும் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்களின் கீழ் மட்டுமே தொடரும்.

- பாலைவனமாக்கலைத் தடுப்பதற்கும், பல்லுயிர்ப் பெருக்கத்தினை மிகவும் நன்கு பாதுகாப்பதற்கும், நிலத்தடி நீரை மீளேற்றம் செய்யவும் ஆரவல்லியின் பாதுகாப்பு மிக முக்கியமானதாகும்.

## INSV கௌண்டின்யா





- INSV கௌண்டின்யா என்பது இந்தியக் கடற்படையின் கையால் தைக்கப்பட்ட பாய்மரத்தைக் கொண்ட கப்பலாகும் என்பதோடு, அஜந்தா குகை சுவரோவியங்களில் 5 ஆம் நூற்றாண்டின் கப்பல் சித்தரிப்புகளால் இது ஈர்க்கப்பட்டது.
- குஜராத்தின் போர்பந்தரிலிருந்து ஓமனின் மஸ்கட் வரையிலான தனது முதல் வெளிநாட்டுப் பயணத்தை இது மேற்கொள்ளும்.
- இந்தக் கப்பல் ஆனது பாரம்பரிய தையல்-பலகை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதோடு, இதில் மரப் பலகைகள் தேங்காய் நார் கயிற்றைப் பயன்படுத்தி தைக்கப்பட்டு இயற்கையான கோந்துகளால் பிணைக்கப் பட்டுள்ளன.
- இந்தத் திட்டம் ஆனது கலாச்சார அமைச்சகம், இந்தியக் கடற்படை மற்றும் ஹோடி கண்டுபிடிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய முத்தரப்பு ஒப்பந்தத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டது.
- தென்கிழக்கு ஆசியாவுடனான இந்தியாவின் வரலாற்றுச் சிறப்பு மிக்க கடல்சார் தொடர்புகளை அடையாளப்படுத்தும் பண்டைய இந்திய மாலுமி கௌண்டின்யாவின் பெயரால் INSV கௌண்டின்யா கப்பலுக்கு பெயரிடப்பட்டது.

# பொருளாதாரச் செய்திகள்

## EPFO நவீனமயமாக்கல் சீர்திருத்தங்கள்

- இந்திய அரசானது, ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி அமைப்பை (EPFO) நவீன மயமாக்குவதற்கு விரிவான சீர்திருத்தங்களை அறிவித்தது.

- இந்தச் சீர்திருத்தங்களை மத்தியத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் அறிவித்தார்.
- EPFO அலுவலகங்கள் ஆனது இந்தியா முழுவதும் தொழில்நுட்பம் சார்ந்த, ஒற்றை சாளர சேவை மையங்களாக மேம்படுத்தப்படும்.
- "எந்த அலுவலக சேவை வசதியும்" நாடு முழுவதும் உள்ள எந்தவொரு EPFO அலுவலகத்திலும் EPF உறுப்பினர்களின் குறைகளைத் தீர்க்க அனுமதிக்கும்.
- செயலற்ற EPF கணக்குகளைச் செயல்படுத்த ஒரு திட்ட முறையிலான உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் (KYC) இயக்கம் தொடங்கப்படும்.
- 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் 100 கோடி குடிமக்களுக்கு சமூகப் பாதுகாப்பு சேவை பரவலை விரிவுபடுத்துவதற்கு அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## K-4 எறிகணை சோதனை




- வங்காள விரிகுடாவில் உள்ள அதன் அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பலான INS அரிகாட்டில் இருந்து K-4 இடைநிலைத் தாக்குதல் வரம்பு கொண்ட உந்து விசை எறிகணையை இந்தியா வெற்றிகரமாக பரிசோதித்தது.
- இந்த எறிகணை சோதனையானது விசாகப் பட்டினம் கடற்கரையில் நடத்தப்பட்டது.
- திட எரிபொருளால் இயக்கப்படுகின்ற K-4 எறிகணை, 3,500 கிமீ தாக்குதல் வரம்பைக்

கொண்டுள்ளது என்பதோடு மேலும் இரண்டு டன் வரை எடையுள்ள அணு ஆயுதத்தை சுமந்து செல்லும் திறன் கொண்டது.

- ❖ INS அரிகாட் என்பது இந்தியாவின் இரண்டாவது அணுசக்தியால் இயங்கும் உந்து விசை எறிகணை தாங்கும் நீர்மூழ்கிக் கப்பல் (SSBN) ஆகும் என்பதோடு இது உத்தி சார் படைப் பிரிவினால் இயக்கப்படுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## குஜராத்தில் புலி





- ❖ புலிகள் இருப்பதற்கான தொடர்ச்சியான சான்றுகளைத் தொடர்ந்து, 33 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு, அதிகாரப்பூர்வமாக புலிகளைக் கொண்ட ஒரு மாநிலமாக குஜராத் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.
- ❖ இந்தியாவில் புலிகள் வளங்காப்பிற்கான முதன்மை அமைப்பான தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையம் (NTCA) இந்த முடிவை முறையாக அறிவித்தது.
- ❖ குஜராத்-மத்தியப் பிரதேச எல்லையில் உள்ள தஹோட் மாவட்டத்தில் அமைந்துள்ள இரத்தன்மஹால் சோம்பல் கரடி சரணாலயத்தில் சுமார் நான்கு வயதுடைய புலி இருப்பது உறுதி செய்யப்பட்டது.
- ❖ இதைத் தொடர்ந்து, உலகின் மிகப்பெரிய வனவிலங்கு கணக்கெடுப்புகளில் ஒன்றான 2026 ஆம் ஆண்டு அகில இந்தியப் புலிகள் மதிப்பீட்டில் (AITE) குஜராத் தற்போது சேர்க்கப் படும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## இந்தியாவில் குறு விவசாயிகள் குறித்த நிலை 2025

- ❖ கிசான் திவாஸ் (டிசம்பர் 23, 2025) அன்று சமத்துவ மேம்பாட்டுக்கான நிறுவனங்கள் மன்றத்தினால் (FEED) 2025 ஆம் ஆண்டு இந்தியாவில் குறு விவசாயிகளின் நிலை குறித்த அறிக்கை வெளியிடப்பட்டது.
- ❖ இந்தியாவின் வேளாண் குடும்பங்களில் 60–70% பங்கில் மட்டுமே இருந்தாலும், குறு விவசாயிகளில் 25 சதவீதத்திற்கும் குறைவானவர்கள் வேளாண் கூட்டுறவுகளுடன் இணைக்கப்பட்டுள்ளனர் என்று அறிக்கை கண்டறிந்துள்ளது.

- ஒரு ஹெக்டேருக்கும் குறைவான நிலத்தை வைத்திருக்கும் விவசாயிகள் குறுநிலை விவசாயிகளாக வரையறுக்கப்படுகிறார்கள்.
- பீகார், திரிபுரா மற்றும் இமாச்சலப் பிரதேசத்தில் கூட்டுறவு பங்கேற்பு குறிப்பாக குறைவாக இருந்தது.
- கூட்டுறவு ஈடுபாட்டிற்கான தடைகளில் சிக்கலான உறுப்பினர் நடைமுறைகள், முதன்மை வேளாண் கடன் சங்கங்களின் (PACS) நீண்ட தூர அமைவிடம், வரையறுக்கப் பட்ட மூலதனம், சமூக விலக்கு மற்றும் பாலின இடைவெளிகள் ஆகியவை அடங்கும்.
- கூட்டுறவுச் சங்கங்களை அணுகிய குறு விவசாயிகள் அதிக வீட்டு வருமானம், மேம்பட்ட வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் கடன், வேளாண் உள்ளீடுகள் மற்றும் பொதுச் சேவைகளுக்கான சிறந்த அணுகல் ஆகியவற்றைப் பெற்றனர்.




## மாநிலச் செய்திகள்

### முர்ஷிதாபாத் கும்பல் கொலை வழக்கு

- மேற்கு வங்காளத்தின் முர்ஷிதாபாத் மாவட்டத்தில் உள்ள நீதிமன்றம், கும்பல் கொலை வழக்கில் 13 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்தது.
- இந்த சம்பவம் முர்ஷிதாபாத்தின் சம்சர்கஞ்சில் உள்ள ஜாஃப்ராபாத் கிராமத்தில் நடைபெற்றது.
- 2025 ஆம் ஆண்டு வக்ஃப் (திருத்தம்) சட்டத்திற்கு எதிரான வன்முறை போராட்டத்தின் போது இந்த கும்பல் கொலை நடைபெற்றது.
- கும்பல் கொலையை கையாளும் பாரதிய நியாய சன்ஹிதா (BNS) சட்டத்தின் 103(2) ஆம் பிரிவின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டது.
- இது இந்தியாவில் கும்பல் கொலை வழக்கிற்கு விதிக்கப்படும் இரண்டாவது தண்டனை மற்றும் மேற்கு வங்காளத்தில் BNS சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட இது

போன்ற முதல் தண்டனையாகும்.

- பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு 15 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க மேற்கு வங்காள அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### டாடா மாற்றமிகு புதுமைக்கான பரிசு 2025




- படுபித்ரி V. சிவபிரசாத் (தேசிய உயிரியல் அறிவியல் மையம்), பாலசுப்பிரமணியன் கோபால் மற்றும் அம்பரீஷ் கோஷ் (இந்திய அறிவியல் கல்வி நிறுவனம்) ஆகிய பெங்களூருவைச் சேர்ந்த மூன்று அறிவியலாளர்கள் 2025 ஆம் ஆண்டிற்கான டாடா மாற்றமிகு புதுமைக்கான பரிசை வென்றனர்.

- உணவுப் பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் சுகாதார நலப் பராமரிப்பு ஆகியவற்றில் ஆராய்ச்சி மேற்கொண்டதற்காக அவர்களுக்கு முறையே விருது வழங்கி அங்கீகரிக்கப்பட்டது.
- தங்கள் ஆராய்ச்சி மற்றும் அதன் நிஜ உலகத் தாக்கத்தை மேம்படுத்துவதற்காக ஒவ்வொருவருக்கும் 2 கோடி ரூபாய் வழங்கப்படும்.
- சிவபிரசாத் மன அழுத்த சகிப்புத்தன்மை மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்த அரிசியில் மேல்மரபியல் (எபிஜெனெடிக்) பொறியியலில் பணியாற்றுகிறார்.
- கோபால் உயிரி பொறியியல் நுட்பத்திற்குட்படுத்தப்பட்ட ஈ. கோலையைப் பயன்படுத்தி நிலையான இரசாயன உற்பத்தியை உருவாக்கினார் என்ற நிலையில் மேலும் கோஷ் இலக்கு சார்ந்த புற்றுநோய் சிகிச்சைக்கு காந்தத் திறன் கொண்ட நுண் எந்திரங்களைப் பயன்படுத்தினார்.

## PMRBP விருதுகள் 2025




- பிரதான் மந்திரி இராஷ்ட்ரிய பால் புரஸ்கார் (PMRBP) என்பது 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இந்தியக் குடியரசுத் தலைவரால் ஆண்டுதோறும் வழங்கப்படும் ஒரு தேசிய விருதாகும்.
- PMRBP ஆனது வீரம், சமூக சேவை, சுற்றுச்சூழல், விளையாட்டு, கலை & கலாச்சாரம் மற்றும் அறிவியல் & தொழில்நுட்பம் ஆகியவற்றில் மகத்தான சாதனைகளுக்காக வழங்கப் படுகிறது.
- 2025 ஆம் ஆண்டில், 18 மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களைச் சேர்ந்த 20 குழந்தைகள் இந்த விருதைப் பெற்றனர் என்பதோடு இந்த விருதுகள் புது டெல்லியில் இந்தியக் குடியரசுத் தலைவரால் வழங்கப்பட்டது.
- 14 வயதான இந்திய கிரிக்கெட் வீரரான வைபவ் சூர்யவன்ஷி, உள்நாட்டுப் போட்டி, 19 வயதுக்குட்பட்டோர் (U-19) மற்றும் இந்திய பிரீமியர் லீக் (IPL) கிரிக்கெட் போட்டிகளில் தனது சாதனைகளுக்காக விளையாட்டுப் பிரிவில் இந்த விருதைப் பெற்றார்.
- லிஸ்ட் A கிரிக்கெட் (விஜய் ஹசாரே கோப்பை), சையத் முஷ்டக் அலி கோப்பை (T20) மற்றும் இந்திய பிரீமியர் லீக் (IPL) ஆகியவற்றில் சதம் அடித்த இளம் வீரர் என்ற பெருமையை இவர் பெற்றார்.
- வீரதீரச் செயல்களுக்காக வயோமா பிரியா (தமிழ்நாடு) மற்றும் கமலேஷ் குமார் (பீகார்), கலை மற்றும் கலாச்சாரத்திற்காக எஸ்தர் லால்துஹவ்மி ஹனாம்தே (மிசோரம்), அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்காக அர்னவ் அனுப்ரியா மகர்ஷி (மகாராஷ்டிரா), விளையாட்டுப் பிரிவிற்காக வைபவ் சூரியவன்ஷி (பீகார்) ஆகியோர் விருது பெற்றனர்.

- ஆண்டுதோறும் அதிகபட்சமாக 25 விருதுகள் இதில் வழங்கப்படுகின்றன என்பதோடு ஒவ்வொன்றும் ஒரு பதக்கம் மற்றும் சான்றிதழை உள்ளடக்கியது.

# முக்கிய தினங்கள்


## சர்வதேசப் பெருந்தொற்று தயார்நிலை தினம் 2025 – டிசம்பர் 27




- பெருந்தொற்றுகளின் தாக்கத்தைக் குறைப்பதற்கான விழிப்புணர்வு, தயார்நிலை மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை ஊக்குவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொது சபையினால் (UNGA) அறிவிக்கப்பட்ட இத்தினம், முதன் முதலில் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.
- தொற்று நோய் பரவலைத் தடுக்க, அவற்றைக் கண்டறிந்து, அவற்றுக்கு எதிர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் பெரும் அவசியத்தை இந்த நாள் எடுத்துக் காட்டுகிறது.
- ஒரு பெருந்தொற்று என்பது ஒரு பிராந்தியத்தில் வழக்கமாக எதிர்பார்க்கப்படுவதை விட அதிகமான மக்களைப் பாதிக்கும் ஒரு நோயின் திடீர் பரவல் ஆகும்.


# இதரச் செய்திகள்

## வீர் பால் திவாஸ் 2025



- வீர் பால் திவாஸ் ஆனது இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 26 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
- இது சாஹிப்சாதா ஜோராவர் சிங் (9 வயது) மற்றும் சாஹிப்சாதா ஃபதே சிங் (7 வயது) ஆகியோரின் தியாகத்தை நினைவு கூரும் விதமாக அனுசரிக்கப்படுகிறது.
- அவர்கள் குரு கோபிந்த் சிங் ஜியின் (பத்தாவது சீக்கிய குரு) இளைய மகன்கள் ஆவர்.
- சீக்கிய சமயத்தினை கைவிட மறுத்ததற்காக சாஹிப்சாதாக்கள் 1705 ஆம் ஆண்டில் சிர்ஹிந்தில் முகலாய ஆளுநர் வஜீர் கானால் தூக்கிலிடப்பட்டனர்.
- இந்த தினம் 2022 ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கத்தினால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப் பட்டது.

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (CPI) 100 ஆம் ஆண்டு நிறைவு





- இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (CPI) 2025 ஆம் ஆண்டில் அதன் 100 ஆம் ஆண்டுகளை நிறைவு செய்தது.
- இந்திய கம்யூனிஸ்ட் கட்சியானது முதன்முதலில் 1920 ஆம் ஆண்டில் தாஷ்கண்டில் M.N. ராய், முகமது அலி, M.P.T. ஆச்சார்யா மற்றும் முகமது ஷபிக் உள்ளிட்ட இந்திய புரட்சியாளர்களால் உருவாக்கப்பட்டது.
- இது 1925 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கான்பூர் கம்யூனிஸ்ட் மாநாட்டில் இந்தியாவில் அதிகாரப் பூர்வமாக நிறுவப்பட்டது.
- சிங்காரவேலு செட்டியார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் தலைவராக இருந்தார்.
- "இன்குலாப் ஜிந்தாபாத்" என்ற முழக்கம் மௌலானா ஹஸ்ரத் மோஹானியால் உருவாக்கப் பட்டு, கான்பூர் மாநாட்டில் எழுப்பப்பட்டது.
- அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC) மற்றும் அகில இந்திய கிசான் சபா (AIKS) போன்ற அமைப்புகளை உருவாக்க CPI உதவியது.
- அகில இந்திய மாணாக்கர் கூட்டமைப்பு (AISF), முற்போக்கு எழுத்தாளர் சங்கம் (PWA), மற்றும் இந்திய மக்கள் நாடக சங்கம் (IPTA) போன்ற அமைப்புகளையும் இது ஆதரித்தது.
- தெலுங்கானா ஆயுதப் போராட்டம், தேபாகா இயக்கம் மற்றும் புன்னப்ரா-வயலார் போராட்டம் போன்ற முக்கிய இயக்கங்களுக்கு CPI முன்னிலை வகித்தது.
- பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து முழுமையான சுதந்திரத்திற்கான கோரிக்கையை இந்த கட்சி ஆதரித்தது.
- சுதந்திர இந்தியாவிற்கான அரசியலமைப்புச் சபையை உருவாக்குவதை CPI தீவிரமாக ஆதரித்தது.

- M.N. ராய் 1934 ஆம் ஆண்டில் ஓர் அரசியலமைப்பை முன்மொழிந்தார்.
- CPI ஆனது நில மறுபகிர்வு, தொழிலாளர் உரிமைகள், குறைந்தபட்ச ஊதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற பிரச்சினைகளை எழுப்பியது.
- இந்தியாவில் கூட்டாட்சி மற்றும் மொழியியல் மற்றும் கலாச்சார பன்முகத் தன்மையையும் இந்தக் கட்சி ஆதரிக்கிறது.

## மீண்டும் வெடிக்கும் பெசிமியானி எரிமலை

- ரஷ்யாவின் பெசிமியானி எரிமலை 69 ஆண்டுகளுக்கு முன்பு, 1956 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் தேதியன்று ஏற்பட்ட ஒரு பெரிய வெடிப்பில் முழுவதும் வெடித்துச் சிதறியது.
- இந்த வெடிப்பில் அந்த சிகரம் இடிந்து விழுந்து, கூம்பு வடிவ மலையை குதிரைலாட வடிவ அரைவட்டப் பள்ளமாக மாற்றியது.
- 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட ஒரு பெரிய வெடிப்பு உட்பட, அடிக்கடி ஏற்படும் வெடிப்புகள் மூலம் இந்த எரிமலை மீண்டும் உருவாகி வருகிறது.
- 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில், பெசிமியானி 2030 மற்றும் 2035 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் அதன் 1956 ஆம் ஆண்டிற்கு முந்தைய உயரத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த எரிமலையானது, வெடிக்காத எரிமலைக் குழம்புகள் (வெளியேறும் வெடிப்புகள்) வழியாகவும் அது வளர்கின்ற அதே நேரத்தில், வெடிப்புச் சாம்பல் மேகங்களையும் தீப்பாறைக் குழம்புகளின் பாய்வுகளையும் வெளியிடுகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★